ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ கோயில் திருமொழி ॥

*This document*[*] *has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

[*]This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

prapatti dot com

# பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| ⋆ | பெரிய திருமொழித் தனியன்கள் | 5 |
| 1 | வாடினேன் | 7 |
| 2 | தாயே தந்தை | 10 |
| 3 | நண்ணாத | 12 |
| 4 | தூவிரிய | 14 |
| 5 | நும்மைத் தொழுதோம் | 16 |
| 6 | உந்திமேல் | 18 |
| 7 | துறப்பேன் | 20 |
| 8 | கறவா மடநாகு | 22 |
| 9 | தெள்ளியீர் | 24 |
| 11 | அக்கும் புலியின் | 26 |
| 11 | காதில் கடிப்பு | 28 |
| 12 | நீள் நாகம் | 30 |
| 13 | மாற்றமுள | 32 |


prapatti dot com

prapatti dot com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பெரிய திருமொழித் தனியன்கள் ॥

திருக்கோட்டியூர் நம்பி அருளிச்செய்தது

கலயாமி கலித்வம்சம் கவிம் லோகதிவாகரம் ।
யச்ய கோபி: ப்ரகாசாபிராவித்யம் நிகதம் தம: ॥

எம்பெருமானார்அருளிச்செய்தது

வாழி பரகாலன் வாழி கலிகன்றி*
வாழி குறையலூர் வாழ் வேந்தன்*-வாழியரோ
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள்* மங்கையர் கோன்
தூயோன் சுடர்மான வேல்

ஆழ்வான் அருளிச்செய்தது

நெஞ்சுக்கிருள் கடி தீபம் அடங்கா நெடும் பிறவி*
நஞ்சுக்கு நல்ல அமுதம் தமிழ் நன்னூல் துறைகள்*
அஞ்சுக் கிலக்கியம் ஆரண சாரம்* பரசமயப்
பஞ்சுக் கனலின் பொறி* பரகாலன் பனுவல்களே

எம்பார் அருளிச்செய்தவை

எங்கள் கதியே! இராமாநுச முநியே!*
சங்கை கெடுத்தாண்ட தவராசா*-பொங்கு புகழ்
மங்கையர் கோன் ஈந்த மறை ஆயிரம் அனைத்தும்*
தங்கு மனம் நீ எனக்குத் தா

மாலைத் தனியே வழி பறிக்க வேணும் என்று*
கோலிப் பதிவிருந்த கொற்றவனே!*-வேலை
அணைத்தருளும் கையால் அடியேன் வினையைத்*
துணித்தருள வேணும் துணிந்து

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

prapatti.com

prapatti dot com

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வாடினேன் ॥

## அஷ்டாக்ஷரத்தின் பெருமை

‡வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்⋆
பெருந்துயர் இடும்பையில் பிறந்து⋆
கூடினேன் கூடி இளையவர் தம்மோடு⋆
அவர் தரும் கலவியே கருதி⋆
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்⋆
உணர்வெனும் பெரும் பதம் தெரிந்து⋆
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன்⋆
நாராயணா என்னும் நாமம் (1)

‡ஆவியே! அமுதே! என நினைந்துருகி⋆
அவர் அவர் பணை முலை துணையாப்⋆
பாவியேன் உணராதெத்தனை பகலும்⋆
பழுதுபோய் ஒழிந்தன நாள்கள்⋆
தூவி சேர் அன்னம் துணையொடும் புணரும்⋆
சூழ் புனல் குடந்தையே தொழுது⋆ என்
நாவினால் உய்ய நான் கண்டு கொண்டேன்⋆
நாராயணா என்னும் நாமம் (2)

சேமமே வேண்டித் தீவினை பெருக்கித்⋆
தெரிவைமார் உருவமே மருவி⋆
ஊமனார் கண்ட கனவிலும் பழுதாய்⋆
ஒழிந்தன கழிந்த அந்நாள்கள்⋆
காமனார் தாதை நம்முடை அடிகள்⋆
தம் அடைந்தார் மனத்திருப்பார்⋆
நாமம் நான் உய்ய நான் கண்டு கொண்டேன்⋆
நாராயணா என்னும் நாமம் (3)

வென்றியே வேண்டி வீழ் பொருட்கிரங்கி⋆
    வேற்கணார் கலவியே கருதி⋆
நின்றவா நில்லா நெஞ்சினை உடையேன்⋆
    என் செய்கேன் நெடு விசும்பணவும்⋆
பன்றியாய் அன்று பாரகம் கீண்ட⋆
    பாழியான் ஆழியான் அருளே⋆
நன்று நான் உய்ய நான் கண்டு கொண்டேன்⋆
    நாராயணா என்னும் நாமம் (4)

கள்வனேன் ஆனேன் படிறு செய்திருப்பேன்⋆
    கண்டவா திரி தந்தேன் ஏலும்⋆
தெள்ளியேன் ஆனேன் செல் கதிக்கமைந்தேன்⋆
    சிக்கெனத் திருவருள் பெற்றேன்⋆
உள் எலாம் உருகிக் குரல் தழுத்தொழிந்தேன்⋆
    உடம்பெலாம் கண்ண நீர் சோர⋆
நள் இருள் அளவும் பகலும் நான் அழைப்பன்⋆
    நாராயணா என்னும் நாமம் (5)

‡எம் பிரான் எந்தை என்னுடைச் சுற்றம்⋆
    எனக்கரசென்னுடை வாணாள்⋆
அம்பினால் அரக்கர் வெருக்கொள நெருக்கி⋆
    அவர் உயிர் செகுத்த எம் அண்ணல்⋆
வம்புலாம் சோலை மா மதிள்⋆ தஞ்சை
    மாமணிக் கோயிலே வணங்கி⋆
நம்பிகாள்! உய்ய நான் கண்டு கொண்டேன்⋆
    நாராயணா என்னும் நாமம் (6)

இற்பிறப்பறியீர் இவர் அவர் என்னீர்⋆
    இன்னதோர் தன்மை என்றுணரீர்⋆
கற்பகம் புலவர் களைகண் என்றுலகில்⋆
    கண்டவா தொண்டரைப் பாடும்⋆
சொற்பொருள் ஆளீர் சொல்லுகேன் வம்மின்⋆
    சூழ் புனல் குடந்தையே தொழுமின்⋆

நற்பொருள் காண்மின் பாடி நீர் உய்மின்⋆
நாராயணா என்னும் நாமம் (7)

கற்றிலேன் கலைகள் ஐம்புலன் கருதும்⋆
கருத்துளே திருத்தினேன் மனத்தை⋆
பெற்றிலேன் அதனால் பேதையேன் நன்மை⋆
பெரு நிலத்தார் உயிர்க்கெல்லாம்⋆
செற்றமே வேண்டித் திரி தருவேன் தவிர்ந்தேன்⋆
செல் கதிக்குய்யும் ஆறெண்ணி⋆
நற்றுணை ஆகப் பற்றினேன் அடியேன்⋆
நாராயணா என்னும் நாமம் (8)

‡குலம் தரும் செல்வம் தந்திடும்⋆ அடியார்
படு துயர் ஆயின எல்லாம்⋆
நிலந் தரம் செய்யும் நீள் விசும்பருளும்⋆
அருளொடு பெருநிலம் அளிக்கும்⋆
வலம் தரும் மற்றும் தந்திடும்⋆ பெற்ற
தாயினும் ஆயின செய்யும்⋆
நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்⋆
நாராயணா என்னும் நாமம் (9)

‡மஞ்சுலாம் சோலை வண்டறை மாநீர்⋆
மங்கையார் வாள் கலிகன்றி⋆
செஞ்சொலால் எடுத்த தெய்வ நன் மாலை⋆
இவை கொண்டு சிக்கெனத் தொண்டீர்!⋆
துஞ்சும்போதழைமின் துயர் வரில் நினைமின்⋆
துயர் இலீர் சொல்லிலும் நன்றாம்⋆
நஞ்சு தான் கண்டீர் நம்முடை வினைக்கு⋆
நாராயணா என்னும் நாமம் (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

prapatti dot com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தாயே தந்தை ॥

## திருவேங்கடம் - 2

‡தாயே தந்தை என்றும்⋆ தாரமே கிளை மக்கள் என்றும்⋆
நோயே பட்டொழிந்தேன்⋆ நுன்னைக் காண்பதோர் ஆசையினால்⋆
வேயேய் பூம் பொழில் சூழ்⋆ விரையார் திருவேங்கடவா!⋆
நாயேன் வந்தடைந்தேன்⋆ நல்கி ஆள் என்னைக் கொண்டருளே (1)

மானேய் கண் மடவார்⋆ மயக்கில் பட்டு⋆ மா நிலத்து
நானே நானாவித⋆ நரகம் புகும் பாவம் செய்தேன்⋆
தேனேய் பூம் பொழில் சூழ்⋆ திருவேங்கட மாமலை⋆ என்
ஆனாய் வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (2)

கொன்றேன் பல் உயிரைக்⋆ குறிக்கோள் ஒன்றிலாமையினால்⋆
என்றேனும் இரந்தார்க்கு⋆ இனிதாக உரைத்தறியேன்⋆
குன்றேய் மேகம் அதிர்⋆ குளிர் மா மலை வேங்கடவா!⋆
அன்றே வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (3)

குலந் தான் எத்தனையும்⋆ பிறந்தே இறந்தெய்த்தொழிந்தேன்⋆
நலந் தான் ஒன்றும் இலேன்⋆ நல்லதோர் அறம் செய்தும் இலேன்⋆
நிலம் தோய் நீள் முகில் சேர்⋆ நெறியார் திருவேங்கடவா!⋆
அலந்தேன் வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (4)

எப் பாவம் பலவும்⋆ இவையே செய்திளைத்தொழிந்தேன்⋆
துப்பா! நின் அடியே⋆ தொடர்ந்தேத்தவும் கிற்கின்றிலேன்⋆
செப்பார் திண்வரை சூழ்⋆ திருவேங்கட மாமலை⋆ என்
அப்பா! வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (5)

மண்ணாய் நீர் எரி கால்⋆ மஞ்சுலாவும் ஆகாசமுமாம்⋆
புண்ணார் ஆக்கை தன்னுள்⋆ புலம்பித்தளர்ந்தெய்த்தொழிந்தேன்⋆
விண்ணார் நீள் சிகர⋆ விரையார் திருவேங்கடவா!⋆
அண்ணா! வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (6)

தெரியேன் பாலகனாய்ப்⋆ பல தீமைகள் செய்துமிட்டேன்⋆
பெரியேன் ஆயின பின்⋆ பிறர்க்கே உழைத்து ஏழை ஆனேன்⋆
கரி சேர் பூம் பொழில் சூழ்⋆ கன மா மலை வேங்கடவா!⋆
அரியே! வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (7)

நோற்றேன் பல் பிறவி⋆ நுன்னைக் காண்பதோர் ஆசையினால்⋆
ஏற்றேன் இப் பிறப்பே⋆ இடர் உற்றனன் எம் பெருமான்!⋆
கோல் தேன் பாய்ந்தொழுகும்⋆ குளிர் சோலை சூழ் வேங்கடவா!⋆
ஆற்றேன் வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (8)

பற்றேல் ஒன்றும் இலேன்⋆ பாவமே செய்து பாவி ஆனேன்⋆
மற்றேல் ஒன்றறியேன்⋆ மாயனே! எங்கள் மாதவனே!⋆
கல் தேன் பாய்ந்தொழுகும்⋆ கமலச்சுனை வேங்கடவா!
அற்றேன் வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (9)

‡கண்ணாய் ஏழுலகுக்குயிராய⋆ எங்கார் வண்ணனை⋆
விண்ணோர் தாம் பரவும்⋆ பொழில் வேங்கட வேதியனை⋆
திண்ணார் மாடங்கள் சூழ்⋆ திரு மங்கையர் கோன் கலியன்⋆
பண்ணார் பாடல் பத்தும்⋆ பயில்வார்க்கில்லை பாவங்களே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ நண்ணாத ॥

திருக்கடல்மல்லை - 2

‡நண்ணாத⋆ வாள் அவுணர் இடைப் புக்கு⋆ வானவரைப்
பெண்ணாகி⋆ அமுதூட்டும் பெருமானார்⋆ மருவினிய
தண்ணார்ந்த கடல் மல்லைத்⋆ தல சயனத்துறைவாரை⋆
எண்ணாதே இருப்பாரை⋆ இறைப் பொழுதும் எண்ணோமே (1)

பார் வண்ண மட மங்கை⋆ பனி நன் மா மலர்க் கிழத்தி⋆
நீர் வண்ணன் மார்வத்தில்⋆ இருக்கையை முன் நினைந்தவன் ஊர்⋆
கார்வண்ண முது முந்நீர்க்⋆ கடல் மல்லைத் தல சயனம்⋆
ஆர் எண்ணும் நெஞ்சுடையார்⋆ அவர் எம்மை ஆள்வாரே (2)

‡ஏனத்தின் உருவாகி⋆ நில மங்கை எழில் கொண்டான்⋆
வானத்தில் அவர் முறையால்⋆ மகிழ்ந்தேத்தி வலம் கொள்ள⋆
கானத்தின் கடல் மல்லைத்⋆ தல சயனத்துறைகின்ற⋆
ஞானத்தின் ஒளி உருவை⋆ நினைவார் என் நாயகரே (3)

விண்டாரை வென்றாவி⋆ விலங்குண்ண மெல் இயலார்⋆
கொண்டாடும் மல் அகலம்⋆ அழல் ஏற வெஞ்சமத்துக்
கண்டாரை⋆ கடல் மல்லைத் தல சயனத்து⋆ உறைவாரைக்
கொண்டாடும் நெஞ்சுடையார்⋆ அவர் எங்கள் குல தெய்வமே (4)

பிச்சச் சிறு பீலிச்⋆ சமண் குண்டர் முதலாயோர்⋆
விச்சைக்கிறை என்னும்⋆ அவ்விறையைப் பணியாதே⋆
கச்சிக் கிடந்தவன் ஊர்⋆ கடல் மல்லைத் தல சயனம்⋆
நச்சித் தொழுவாரை⋆ நச்சென்தன் நல் நெஞ்சே! (5)

புலன் கொள் நிதிக் குவையோடு⋆ புழைக் கை மா களிற்றினமும்⋆
நலம் கொள் நவமணிக் குவையும்⋆ சுமந்தெங்கும் நான்றொசிந்து⋆
கலங்கள் இயங்கும் மல்லைக்⋆ கடல் மல்லைத் தல சயனம்⋆
வலங்கொள் மனத்தார் அவரை⋆ வலங்கொள் என் மட நெஞ்சே! (6)

பஞ்சிச் சிறு கூழை⋆ உருவாகி மருவாத⋆
வஞ்சப் பெண் நஞ்சுண்ட⋆ அண்ணல் முன் நண்ணாத⋆
கஞ்சைக் கடந்தவன் ஊர்⋆ கடல் மல்லைத் தல சயனம்⋆
நெஞ்சில் தொழுவாரைத்⋆ தொழுவாய் என் தூய் நெஞ்சே! (7)

செழு நீர் மலர்க் கமலம்⋆ திரை உந்து வன் பகட்டால்⋆
உழு நீர் வயல் உழவர் உழ⋆ பின் முன் பிழைத்தெழுந்த⋆
கழு நீர் கடி கமழும்⋆ கடல் மல்லைத் தல சயனம்⋆
தொழு நீர் மனத்தவரைத்⋆ தொழுவாய் என் தூய் நெஞ்சே (8)

பிணங்கள் இடு காடதனுள்⋆ நடமாடு பிஞ்ஞகனோடு⋆
இணங்கு திருச் சக்கரத்து⋆ எம் பெருமானார்க்கிடம்⋆ விசும்பில்
கணங்கள் இயங்கும் மல்லைக்⋆ கடல் மல்லைத் தல சயனம்⋆
வணங்கும் மனத்தார் அவரை⋆ வணங்கென்தன் மட நெஞ்சே (9)

‡கடி கமழும் நெடு மறுகில்⋆ கடல் மல்லைத் தல சயனத்து⋆
அடிகள் அடியே நினையும்⋆ அடியவர்கள் தம் அடியான்⋆
வடி கொள் நெடு வேல் வலவன்⋆ கலிகன்றி ஒலி வல்லார்⋆
முடி கொள் நெடு மன்னவர் தம்⋆ முதல்வர் முதல் ஆவாரே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தூவிரிய ॥

திருவாலி - 2

‡தூவிரிய மலர் உழக்கித்⋆ துணையோடும் பிரியாதே⋆
பூவிரிய மது நுகரும்⋆ பொறி வரிய சிறு வண்டே!⋆
தீவிரிய மறைவளர்க்கும்⋆ புகழ் ஆளர் திருவாலி⋆
ஏவரி வெம் சிலையானுக்கு⋆ என் நிலைமை உரையாயே (1)

பிணி அவிழும் நறு நீல⋆ மலர் கிழியப் பெடையோடும்⋆
அணிமலர்மேல் மது நுகரும்⋆ அறு கால சிறு வண்டே!⋆
மணி கெழுநீர் மருங்கலரும்⋆ வயல் ஆலி மணவாளன்⋆
பணி அறியேன் நீ சென்று⋆ என் பயலை நோய் உரையாயே (2)

நீர் வானம் மண்ணெரி காலாய்⋆ நின்ற நெடுமால்⋆ தன்
தார் ஆய நறுந் துளவம்⋆ பெரும் தகையேற்கருளானே⋆
சீர் ஆரும் வளர் பொழில் சூழ்⋆ திருவாலி வயல் வாழும்⋆
கூர்வாய சிறு குருகே!⋆ குறிப்பறிந்து கூறாயே (3)

தானாக நினையானேல்⋆ தன் நினைந்து நைவேற்கு⋆ ஓர்
மீன் ஆய கொடி நெடு வேள்⋆ வலி செய்ய மெலிவேனோ⋆
தேன்வாய வரி வண்டே!⋆ திருவாலி நகர் ஆளும்⋆
ஆன் ஆயற்கென் உறுநோய்⋆ அறியச் சென்றுரையாயே (4)

வாள் ஆய கண் பனிப்ப⋆ மென் முலைகள் பொன் அரும்ப⋆
நாள் நாளும்⋆ நின் நினைந்து நைவேற்கு⋆ ஓ! மண் அளந்த
தாளாளா! தண் குடந்தை நகர் ஆளா!⋆ வரை எடுத்த
தோளாளா⋆ என் தனக்கு⋆ ஓர் துணையாளன் ஆகாயே (5)

தார் ஆய தண் துளவ⋆ வண்டுழுத வரை மார்பன்⋆
போர் ஆனைக் கொம்பொசித்த⋆ புட்பாகன் என் அம்மான்⋆
தேர் ஆரும் நெடு வீதித்⋆ திருவாலி நகர் ஆளும்⋆
கார் ஆயன் என்னுடைய⋆ கன வளையும் கவர்வானோ (6)

கொண்டரவத் திரை உலவு⋆ குரை கடல்மேல் குலவரை போல்⋆
பண்டரவின் அணைக் கிடந்து⋆ பார் அளந்த பண்பாளா!⋆
வண்டமரும் வளர் பொழில் சூழ்⋆ வயல் ஆலி மைந்தா!⋆ என்
கண் துயில் நீ கொண்டாய்க்கு⋆ என் கன வளையும் கடவேனோ (7)

குயில் ஆலும் வளர் பொழில் சூழ்⋆ தண் குடந்தைக் குடம் ஆடீ⋆
துயிலாத கண் இணையேன்⋆ நின் நினைந்து துயர்வேனோ!⋆
முயல் ஆலும் இள மதிக்கே⋆ வளை இழந்தேற்கு⋆ இது நடுவே
வயல் ஆலி மணவாளா!⋆ கொள்வாயோ மணி நிறமே (8)

நிலை ஆளா! நின் வணங்க⋆ வேண்டாயே ஆகிலும்⋆ என்
முலை ஆள ஒருநாள்⋆ உன் அகலத்தால் ஆளாயே⋆
சிலை ஆளா! மரம் எய்த திறல் ஆளா!⋆ திருமெய்ய
மலையாள⋆ நீ ஆள⋆ வளை ஆள மாட்டோமே (9)

‡மையிலங்கு கருங்குவளை⋆ மருங்கலரும் வயல் ஆலி⋆
நெய்யிலங்கு சுடர் ஆழிப்⋆ படையானை நெடுமாலை⋆
கையிலங்கு வேல் கலியன்⋆ கண்டுரைத்த தமிழ் மாலை⋆
ஐயிரண்டும் இவை வல்லார்க்கு⋆ அரு வினைகள் அடையாவே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

prapatti.com

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ நும்மைத் தொழுதோம் ॥

திருவிந்தளூர்

‡நும்மைத் தொழுதோம்⋆ நுந் தம் பணி செய்திருக்கும் நும்மடியோம்⋆
இம்மைக்கின்பம் பெற்றோம்⋆ எந்தாய் இந்தளூரீரே⋆
எம்மைக் கடிதாக் கருமம் அருளி⋆ ஆவா! என்றிரங்கி⋆
நம்மை ஒருகால் காட்டி நடந்தால்⋆ நாங்கள் உய்யோமே (1)

‡சிந்தை தன்னுள் நீங்காதிருந்த திருவே!⋆ மருவினிய
மைந்தா⋆ அந்தண் ஆலி மாலே!⋆ சோலை மழ களிறே!⋆
நந்தா விளக்கின் சுடரே!⋆ நறையூர் நின்ற நம்பீ⋆
என் எந்தாய்! இந்தளூராய்!⋆ அடியேற்கிறையும் இரங்காயே! (2)

பேசுகின்றதிதுவே⋆ வையம் ஈர் அடியால் அளந்த⋆
மூசி வண்டு முரலும்⋆ கண்ணி முடியீர்⋆ உம்மைக் காணும்
ஆசை என்னும் கடலில் வீழ்ந்து⋆ இங்கயர்த்தோம்⋆ அயலாரும்
ஏசுகின்றதிதுவே காணும்⋆ இந்தளூரீரே! (3)

ஆசை வழுவாதேத்தும்⋆ எமக்கிங்கிழுக்காய்த்து⋆ அடியோர்க்குத்
தேசம் அறிய⋆ உமக்கே ஆளாய்த் திரிகின்றோமுக்கு⋆
காசின் ஒளியில் திகழும் வண்ணம்⋆ காட்டீர் எம் பெருமான்⋆
வாசி வல்லீர்! இந்தளூரீர்!⋆ வாழ்ந்தே போம் நீரே! (4)

தீயெம் பெருமான் நீரெம் பெருமான்⋆ திசையும் இரு நிலனு-
மாய்⋆ எம் பெருமான் ஆகி நின்றால்⋆ அடியோம் காணோமால்⋆
தாயெம் பெருமான்⋆ தந்தை தந்தை ஆவீர்⋆ அடியோமுக்கே
எம் பெருமான் அல்லீரோ நீர்⋆ இந்தளூரீரே! (5)

சொல்லாதொழியகில்லேன்⋆ அறிந்த சொல்லில்⋆ நும்மடியார்
எல்லாரோடும் ஒக்க⋆ எண்ணியிருந்தீர் அடியேனை⋆
நல்லார் அறிவீர் தீயார் அறிவீர்⋆ நமக்கிவ்வுலகத்தில்⋆
எல்லாம் அறிவீர் ஈதே அறியீர்⋆ இந்தளூரீரே! (6)

மாட்டீர் ஆனீர் பணி நீர் கொள்ள⋆ எம்மைப் பணி அறியா
விட்டீர்⋆ இதனை வேறே சொன்னோம்⋆ இந்தளூரீரே!⋆
காட்டீர் ஆனீர்⋆ நுந்தம் அடிக்கள் காட்டில்⋆ உமக்கிந்த
நாட்டே வந்து தொண்டர் ஆன⋆ நாங்கள் உய்யோமே (7)

முன்னை வண்ணம் பாலின் வண்ணம்⋆ முழுதும் நிலை நின்ற⋆
பின்னை வண்ணம் கொண்டல் வண்ணம்⋆ வண்ணம் எண்ணுங்கால்⋆
பொன்னின் வண்ணம் மணியின் வண்ணம்⋆ புரையும் திருமேனி⋆
இன்ன வண்ணம் என்று காட்டீர்⋆ இந்தளூரீரே! (8)

எந்தை தந்தை தம்மான் என்னென்று⋆ எமர் ஏழ் ஏழளவும்⋆
வந்து நின்ற தொண்டரோர்க்கே⋆ வாசி வல்லீரால்⋆
சிந்தை தன்னுள் முந்தி நிற்றிர்⋆ சிறிதும் திருமேனி⋆
இந்த வண்ணம் என்று காட்டீர்⋆ இந்தளூரீரே (9)

‡ஏர் ஆர் பொழில் சூழ்⋆ இந்தளூரில் எந்தை பெருமானை⋆
கார் ஆர் புறவின் மங்கை வேந்தன்⋆ கலியன் ஒலி செய்த⋆
சீர் ஆர் இன் சொல் மாலை⋆ கற்றுத் திரிவார் உலகத்தில்⋆
ஆர் ஆர் அவரே⋆ அமரர்க்கென்றும் அமரர் ஆவாரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ உந்திமேல் ॥

திருவரங்கம் - 1

‡உந்திமேல் நான்முகனைப் படைத்தான்⋆ உலகுண்டவன்
எந்தை பெம்மான்⋆ இமையோர்கள் தாதைக்கு⋆ இடம் என்பரால்⋆
சந்தினோடு மணியும் கொழிக்கும்⋆ புனல் காவிரி⋆
அந்தி போலும் நிறத்தார் வயல் சூழ்⋆ தென் அரங்கமே (1)

வையம் உண்டால் இலை மேவும் மாயன்⋆ மணி நீள் முடிப்⋆
பை கொள் நாகத்தணையான்⋆ பயிலும் இடம் என்பரால்⋆
தையல் நல்லார் குழல் மாலையும்⋆ மற்றவர் தட முலை⋆
செய்ய சாந்தும் கலந்திழி புனல் சூழ்⋆ தென் அரங்கமே (2)

பண்டிவ்வையம் அளப்பான் சென்று⋆ மாவலி கையில் நீர்
கொண்ட⋆ ஆழித் தடக் கைக்⋆ குறளன் இடம் என்பரால்⋆
வண்டு பாடும் மது வார் புனல்⋆ வந்திழி காவிரி⋆
அண்ட நாறும் பொழில் சூழ்ந்து⋆ அழகார் தென் அரங்கமே (3)

விளைத்த வெம் போர் விறல் வாள் அரக்கன்⋆ நகர் பாழ் பட⋆
வளைத்த வல் வில் தடக்கை அவனுக்கு⋆ இடம் என்பரால்⋆
துளைக் கை யானை மருப்பும்⋆ அகிலும் கொணர்ந்துந்தி⋆ முன்
திளைக்கும் செல்வப் புனல் காவிரி சூழ்⋆ தென் அரங்கமே (4)

வம்புலாம் கூந்தல் மண்டோதரி காதலன்⋆ வான் புக⋆
அம்பு தன்னால் முனிந்த⋆ அழகன் இடம் என்பரால்⋆
உம்பர் கோனும் உலகேழும்⋆ வந்தீண்டி வணங்கும்⋆ நல்
செம் பொனாரும் மதிள் சூழ்ந்து⋆ அழகார் தென் அரங்கமே (5)

கலை உடுத்த அகலல்குல்⋆ வன் பேய் மகள் தாய் என⋆
முலை கொடுத்தாள் உயிர் உண்டவன்⋆ வாழும் இடம் என்பரால்⋆
குலையெடுத்த கதலிப்⋆ பொழிலூடும் வந்துந்தி⋆ முன்
அலை எடுக்கும் புனல் காவிரி சூழ்⋆ தென் அரங்கமே (6)

கஞ்சன் நெஞ்சும் கடு மல்லரும்⋆ சகடமும் காலினால்⋆
துஞ்ச வென்ற சுடர் ஆழியான்⋆ வாழிடம் என்பரால்⋆
மஞ்சு சேர் மாளிகை⋆ நீடகில் புகையும்⋆ மறையோர்
செஞ்சொல் வேள்விப் புகையும் கமழும்⋆ தென் அரங்கமே (7)

ஏன மீன் ஆமையோடு⋆ அரியும் சிறு குறளுமாய்⋆
தானுமாயத்⋆ தரணித் தலைவன் இடம் என்பரால்⋆
வானும் மண்ணும் நிறையப்⋆ புகுந்தீண்டி வணங்கும்⋆ நல்
தேனும் பாலும் கலந்தன்னவர் சேர்⋆ தென் அரங்கமே (8)

சேயன் என்றும் மிகப் பெரியன்⋆ நுண் நேர்மையின் ஆய⋆ இம்
மாயையையாரும் அறியா வகையான்⋆ இடம் என்பரால்⋆
வேயின் முத்தும் மணியும் கொணர்ந்து⋆ ஆர் புனல் காவிரி⋆
ஆய பொன் மா மதிள் சூழ்ந்து⋆ அழகார் தென் அரங்கமே (9)

‡அல்லி மாதர் அமரும்⋆ திரு மார்வன் அரங்கத்தை⋆
கல்லின் மன்னு மதிள்⋆ மங்கையர் கோன் கலிகன்றி சொல்⋆
நல்லிசை மாலைகள்⋆ நால் இரண்டும் இரண்டும் உடன்⋆
வல்லவர் தாம் உலகாண்டு⋆ பின் வான் உலகாள்வரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ துறப்பேன் ॥

திருவிண்ணகர் - 3

‡துறப்பேன் அல்லேன்⋆ இன்பம் துறவாது⋆ நின்னுருவம்
மறப்பேன் அல்லேன்⋆ என்றும் மறவாது⋆ யான் உலகில்
பிறப்பேனாக எண்ணேன்⋆ பிறவாமை பெற்றது⋆ நின்
திறத்தேன் ஆதன்மையால்⋆ திருவிண்ணகரானே (1)

துறந்தேன் ஆர்வச் செற்றச் சுற்றம்⋆ துறந்தமையால்⋆
சிறந்தேன் நின்னடிக்கே⋆ அடிமை திருமாலே⋆
அறம் தானாய்த் திரிவாய்⋆ உன்னை என் மனத்தகத்தே⋆
திறம்பாமல் கொண்டேன்⋆ திருவிண்ணகரானே (2)

மானேய் நோக்கு நல்லார்⋆ மதி போல் முகத்துலவும்⋆
ஊனேய் கண் வாளிக்கு⋆ உடைந்தோட்டந்துன் அடைந்தேன்⋆
கோனே! குறுங்குடியுள் குழகா!⋆ திருநறையூர்த்
தேனே⋆ வரு புனல் சூழ்⋆ திருவிண்ணகரானே (3)

சாந்தேந்து மென் முலையார்⋆ தடந் தோள் புணர் இன்ப வெள்ளத்-
தாழ்ந்தேன்⋆ அரு நகரத்தழுந்தும்⋆ பயன் படைத்தேன்⋆
போந்தேன் புண்ணியனே!⋆ உன்னையெய்தி என் தீவினைகள்
தீர்ந்தேன்⋆ நின் அடைந்தேன்⋆ திருவிண்ணகரானே (4)

மற்றோர் தெய்வம் எண்ணேன்⋆ உன்னை என் மனத்து வைத்துப்
பெற்றேன்⋆ பெற்றதுவும்⋆ பிறவாமை எம் பெருமான்⋆
வற்றா நீள் கடல் சூழ்⋆ இலங்கை இராவணனைச்
செற்றாய்⋆ கொற்றவனே!⋆ திருவிண்ணகரானே (5)

மையொண் கருங்கடலும்⋆ நிலனும் அணி வரையும்⋆
செய்ய சுடர் இரண்டும்⋆ இவையாய நின்னை⋆ நெஞ்சில்
உய்யும் வகை உணர்ந்தேன்⋆ உண்மையால் இனி⋆ யாதும் மற்றோர்
தெய்வம் பிறிதறியேன்⋆ திருவிண்ணகரானே (6)

prapatti.com

வேறே கூறுவதுண்டு⋆ அடியேன் விரித்துரைக்கு
மாறே⋆ நீ பணியாதடை⋆ நின் திருமனத்து⋆
கூறேன் நெஞ்சு தன்னால்⋆ குணம் கொண்டு⋆ மற்றோர் தெய்வம்
தேறேன் உன்னை அல்லால்⋆ திருவிண்ணகரானே (7)

முளிந்தீந்த வேங்கடத்து⋆ மூரிப் பெருங்களிற்றால்⋆
விளிந்தீந்த மா மரம் போல்⋆ வீழ்ந்தாரை நினையாதே⋆
அளிந்தோர்ந்த சிந்தை⋆ நின்பால் அடியேற்கு⋆ வான் உலகம்
தெளிந்தே என்றெய்துவது⋆ திருவிண்ணகரானே (8)

சொல்லாய் திரு மார்வா!⋆ உனக்காகித் தொண்டு பட்ட
நல்லேனை⋆ வினைகள் நலியாமை⋆ நம்பு நம்பீ⋆
மல்லா! குடம் ஆடி!⋆ மதுசூதனே⋆ உலகில்
செல்லா நல்லிசையாய்!⋆ திருவிண்ணகரானே (9)

‡தாரார் மலர்க் கமலத்⋆ தடம் சூழ்ந்த தண் புறவில்⋆
சீரார் நெடு மறுகில்⋆ திருவிண்ணகரானைக்⋆
காரார் புயல் தடக்கைக்⋆ கலியன் ஒலி மாலை⋆
ஆரார் இவை வல்லார்⋆ அவர்க்கல்லல் நில்லாவே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

prapatti.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ கறவா மடநாகு ॥

திருநறையூர் - 8

‡கறவா மட நாகு⋆ தன் கன்றுள்ளினாற் போல்⋆
மறவாதடியேன்⋆ உன்னையே அழைக்கின்றேன்⋆
நறவார் பொழில் சூழ்⋆ நறையூர் நின்ற நம்பி⋆
பிறவாமை எனைப் பணி⋆ எந்தை பிரானே! (1)

வற்றா முது நீரொடு⋆ மால்வரை ஏழும்⋆
துற்றாக முன் துற்றிய⋆ தொல் புகழோனே⋆
அற்றேன் அடியேன்⋆ உன்னையே அழைக்கின்றேன்⋆
பெற்றேன் அருள் தந்திடு⋆ என் எந்தை பிரானே! (2)

தாரேன் பிறர்க்கு⋆ உன் அருள் என்னிடை வைத்தாய்⋆
ஆரேன் அதுவே⋆ பருகிக் களிக்கின்றேன்⋆
காரேய் கடலே மலையே⋆ திருக்கோட்டி
ஊரே⋆ உகந்தாயை⋆ உகந்தடியேனே (3)

புள் வாய் பிளந்த⋆ புனிதா! என்றழைக்க⋆
உள்ளே நின்று⋆ என் உள்ளம் குளிரும் ஒருவா!⋆
கள்வா!⋆ கடல்மல்லைக் கிடந்த கரும்பே⋆
வள்ளால்! உன்னை⋆ எங்ஙனம் நான் மறக்கேனே (4)

வில்லேர் நுதல்⋆ வேல் நெடுங்கண்ணியும் நீயும்⋆
கல்லார் கடுங்கானம்⋆ திரிந்த களிறே⋆
நல்லாய்! நர நாரணனே!⋆ எங்கள் நம்பி⋆
சொல்லாய் உன்னை⋆ யான் வணங்கித் தொழும் ஆறே (5)

பணியேய் பரங்குன்றின்⋆ பவளத் திரளே⋆
முனியே⋆ திருமூழிக்களத்து விளக்கே⋆
இனியாய்! தொண்டரோம்⋆ பருகின்னமுதாய
கனியே⋆ உன்னைக் கண்டு கொண்டு⋆ உய்ந்தொழிந்தேனே (6)

prapatti.com

கதியேல் இல்லை⋆ நின்னருள் அல்லதெனக்கு⋆
நிதியே!⋆ திருநீர்மலை நித்திலத் தொத்தே⋆
பதியே பரவித் தொழும்⋆ தொண்டர் தமக்குக்
கதியே⋆ உன்னைக் கண்டு கொண்டுய்ந்தொழிந்தேனே (7)

அத்தா! அரியே! என்று⋆ உன்னை அழைக்க⋆
பித்தா வென்று பேசுகின்றார்⋆ பிறர் என்னை⋆
முத்தே! மணி மாணிக்கமே!⋆ முளைக்கின்ற வித்தே⋆
உன்னை எங்ஙனம் நான்⋆ விடுகேனே! (8)

தூயாய்! சுடர் மா மதி போல்⋆ உயிர்க்கெல்லாம்⋆
தாயாய் அளிக்கின்ற⋆ தண் தாமரைக் கண்ணா!⋆
ஆயா! அலை நீர் உலகேழும்⋆ முன்னுண்ட
வாயா⋆ உன்னை எங்ஙனம்⋆ நான் மறக்கேனே (9)

‡வண்டார் பொழில் சூழ்⋆ நறையூர் நம்பிக்கு⋆ என்றும்
தொண்டாய⋆ கலியன் ஒலி செய் தமிழ் மாலை⋆
தொண்டீர்! இவை பாடுமின்⋆ பாடி நின்றாட⋆
உண்டே விசும்பு⋆ உந்தமக்கில்லை துயரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

prapatti.com

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தெள்ளியீர் ॥

## திருக்கண்ணபுரம் - 2

‡தெள்ளியீர்!⋆ தேவர்க்கும் தேவர் திருத் தக்கீர்!⋆
வெள்ளியீர்⋆ வெய்ய விழு நிதி வண்ணர்⋆ ஓ!
துள்ளு நீர்க்⋆ கண்ணபுரம் தொழுதாள் இவள்
கள்வியோ⋆ கைவளை கொள்வது தக்கதே (1)

நீணிலா முற்றத்து⋆ நின்றிவள் நோக்கினாள்⋆
காணுமோ!⋆ கண்ணபுரம் என்று காட்டினாள்⋆
பாணனார் திண்ணம் இருக்க⋆ இனி இவள்
நாணுமோ⋆ நன்று நன்று⋆ நறையூரர்க்கே (2)

‡அருவி சோர் வேங்கடம்⋆ நீர்மலை என்று வாய்
வெருவினாள்⋆ மெய்யம் வினவி இருக்கின்றாள்⋆
பெருகு சீர்க்⋆ கண்ணபுரம் என்று பேசினாள்
உருகினாள்⋆ உள்மெலிந்தாள்⋆ இதுவென்கொலோ (3)

உண்ணும் நாள் இல்லை⋆ உறக்கமும் தான் இல்லை⋆
பெண்மையும் சால⋆ நிறைந்திலள் பேதை தான்⋆
கண்ணனூர் கண்ணபுரம் தொழும்⋆ கார்க் கடல்
வண்ணர்மேல்⋆ எண்ணம் இவட்கு⋆ இதுவென்கொலோ (4)

கண்ணனூர்⋆ கண்ணபுரம் தொழும் காரிகை⋆
பெண்மையும் தன்னுடை⋆ உண்மை உரைக்கின்றாள்⋆
வெண்ணெயுண்டாப்புண்ட⋆ வண்ணம் விளம்பினாள்⋆
வண்ணமும்⋆ பொன் நிறம் ஆவதொழியுமே (5)

வட வரை நின்றும் வந்து⋆ இன்று கணபுரம்⋆
இடவகை கொள்வது⋆ யாம் என்று பேசினாள்⋆
மடவரல் மாதர் என் பேதை⋆ இவர்க்கிவள்
கடவதென்⋆ கண் துயில்⋆ இன்றிவர் கொள்ளவே (6)

prapatti.com

‡தரங்க நீர் பேசினும்⋆ தண் மதி காயினும்⋆
இரங்குமோ⋆ எத்தனை நாள் இருந்தெள்கினாள்⋆
துரங்கம் வாய் கீண்டுகந்தான் அது⋆ தொன்மை ஊர்⋆
அரங்கமே என்பது⋆ இவள் தனக்காசையே (7)

தொண்டெல்லாம் நின்னடியே⋆ தொழுதுய்யுமா
கண்டு⋆ தான் கணபுரம்⋆ தொழப் போயினாள்⋆
வண்டுலாம் கோதை என் பேதை⋆ மணி நிறம்
கொண்டு தான்⋆ கோயின்மை செய்வது⋆ தக்கதே (8)

முள்ளெயிறேய்ந்தில⋆ கூழை முடிகொடா⋆
தெள்ளியள் என்பதோர்⋆ தேசிலள் என் செய்கேன்⋆
கள்ளவிழ் சோலைக்⋆ கணபுரம் கை தொழும்
பிள்ளையை⋆ பிள்ளை என்று⋆ எண்ணப் பெறுவரே (9)

‡கார்மலி⋆ கண்ணபுரத்தெம் அடிகளை⋆
பார் மலி மங்கையர் கோன்⋆ பரகாலன் சொல்⋆
சீர் மலி பாடல்⋆ இவை பத்தும் வல்லவர்⋆
நீர் மலி வையத்து⋆ நீடு நிற்பார்களே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

prapatti.com

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ அக்கும் புலியின் ॥

திருக்குறுங்குடி - 2

‡அக்கும் புலியின்⋆ அதளும் உடையார்⋆ அவர் ஒருவர்
பக்கம் நிற்க நின்ற⋆ பண்பர் ஊர் போலும்⋆
தக்க மரத்தின்⋆ தாழ் சினையேறி⋆ தாய் வாயில்
கொக்கின் பிள்ளை⋆ வெள்ளிறவுண்ணும் குறுங்குடியே (1)

துங்கார் அரவத் திரை வந்துலவத்⋆ தொடு கடலுள்⋆
பொங்கார் அரவில் துயிலும்⋆ புனிதர் ஊர் போலும்⋆
செங்கால் அன்னம்⋆ திகழ் தண் பணையில் பெடையோடும்⋆
கொங்கார் கமலத்து⋆ அலரில் சேரும் குறுங்குடியே (2)

வாழக் கண்டோம்⋆ வந்து காண்மின் தொண்டீர்காள்⋆
கேழல் செங்கண்⋆ மாமுகில் வண்ணர் மருவும் ஊர்⋆
ஏழைச் செங்கால்⋆ இன் துணை நாரைக்கிரை தேடி⋆
கூழைப் பார்வைக்⋆ கார் வயல் மேயும் குறுங்குடியே (3)

சிர முன் ஐந்தும் ஐந்தும்⋆ சிந்தச் சென்று⋆ அரக்கன்
உரமும் கரமும் துணித்த⋆ உரவோன் ஊர் போலும்⋆
இரவும் பகலும்⋆ ஈன் தேன் முரல⋆ மன்றெல்லாம்
குரவின் பூவே தான்⋆ மண நாறும் குறுங்குடியே (4)

கவ்வைக் களிற்று மன்னர் மாளக்⋆ கலி மான் தேர்
ஐவர்க்காய்⋆ அன்றமரில்⋆ உய்த்தான் ஊர் போலும்⋆
மை வைத்திலங்கு⋆ கண்ணார் தங்கள் மொழியொப்பான்⋆
கொவ்வைக் கனிவாய்க்⋆ கிள்ளை பேசும் குறுங்குடியே (5)

தீநீர் வண்ண⋆ மா மலர் கொண்டு விரையேந்தி⋆
தூநீர் பரவித்⋆ தொழுமின் எழுமின் தொண்டீர்காள்⋆
மாநீர் வண்ணர்⋆ மருவி உறையும் இடம்⋆ வானில்
கூனீர் மதியை⋆ மாடம் தீண்டும் குறுங்குடியே (6)

prapatti.dot.com

வல்லிச் சிறு நுண்ணிடையாரிடை⋆ நீர் வைக்கின்ற⋆
அல்லல் சிந்தை தவிர⋆ அடைமின் அடியீர்காள்⋆
சொல்லில் திருவே அனையார்⋆ கனிவாய் எயிறொப்பான்⋆
கொல்லை முல்லை⋆ மெல்லரும்பீனும் குறுங்குடியே (7)

நாரார் இண்டை⋆ நாண் மலர் கொண்டு நம் தமர்காள்⋆
ஆரா அன்போடு⋆ எம்பெருமான் ஊர் அடைமின்கள்⋆
தாரா வாரும்⋆ வார் புனல் மேய்ந்து வயல் வாழும்⋆
கூர் வாய் நாரை⋆ பேடையொடாடும் குறுங்குடியே (8)

நின்ற வினையும் துயரும் கெட⋆ மா மலர் ஏந்தி⋆
சென்று பணிமின் எழுமின்⋆ தொழுமின் தொண்டீர்காள்⋆
என்றும் இரவும் பகலும்⋆ வரி வண்டிசை பாட⋆
குன்றின் முல்லை⋆ மன்றிடை நாறும் குறுங்குடியே (9)

‡சிலையால் இலங்கை செற்றான்⋆ மற்றோர் சின வேழம்⋆
கொலையார் கொம்பு கொண்டான் மேய⋆ குறுங்குடிமேல்⋆
கலையார் பனுவல் வல்லான்⋆ கலியன் ஒலி மாலை⋆
நிலையார் பாடல் பாடப்⋆ பாவம் நில்லாவே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ காதில் கடிப்பு ॥

## ஆய்ச்சியின் ஊடல் திறம்

‡காதில் கடிப்பிட்டுக்⋆ கலிங்கம் உடுத்து⋆
தாது நல்ல⋆ தண்ணந் துழாய் கொடணிந்து⋆
போது மறுத்துப்⋆ புறமே வந்து நின்றீர்⋆
ஏதுக்கிதுவென்⋆ இதுவென் இதுவென்னோ (1)

துவராடை உடுத்து⋆ ஒரு செண்டு சிலுப்பி⋆
கவராக முடித்துக்⋆ கலிக் கச்சுக் கட்டி⋆
சுவரார் கதவின் புறமே⋆ வந்து நின்றீர்⋆
இவரார் இதுவென்⋆ இதுவென் இதுவென்னோ (2)

கருளக் கொடி ஒன்றுடையீர்!⋆ தனிப் பாகீர்⋆
உருளச் சகடம் அது⋆ உறக்கில் நிமிர்த்தீர்⋆
மருளைக் கொடு பாடி வந்து⋆ இல்லம் புகுந்தீர்⋆
இருளத்திதுவென்⋆ இதுவென் இதுவென்னோ (3)

நாமம் பலவும் உடை⋆ நாரண நம்பீ⋆
தாமத் துளபம்⋆ மிக நாறிடுகின்றீர்⋆
காமன் எனப்பாடி வந்து⋆ இல்லம் புகுந்தீர்⋆
ஏமத்திதுவென்⋆ இதுவென் இதுவென்னோ (4)

சுற்றும் குழல் தாழச்⋆ சுரிகை அணைத்து⋆
மற்றும் பல⋆ மா மணி பொன் கொடணிந்து⋆
முற்றம் புகுந்து⋆ முறுவல் செய்து நின்றீர்⋆
எற்றுக்கிதுவென்⋆ இதுவென் இதுவென்னோ (5)

ஆன் ஆயரும்⋆ ஆ நிரையும் அங்கொழியக்⋆
கூன் ஆயதோர்⋆ கொற்ற வில்லொன்று கையேந்திப்⋆
போனார் இருந்தாரையும்⋆ பார்த்துப் புகுதீர்⋆
ஏனோர்கள் முன்னென்⋆ இதுவென் இதுவென்னோ (6)

மல்லே பொருத திரள் தோள்⋆ மணவாளீர்⋆
அல்லே அறிந்தோம்⋆ நும் மனத்தின் கருத்தை⋆
சொல்லாதொழியீர்⋆ சொன்ன போதினால் வாரீர்⋆
எல்லே இதுவென்⋆ இதுவென் இதுவென்னோ (7)

புக்காடரவம்⋆ பிடித்தாட்டும் புனிதீர்⋆
இக்காலங்கள்⋆ யாம் உமக்கேதொன்றும் அல்லோம்⋆
தக்கார் பலர்⋆ தேவிமார் சாலவுடையீர்⋆
எக்கே! இதுவென்⋆ இதுவென் இதுவென்னோ (8)

ஆடி அசைந்து⋆ ஆய் மடவாரொடு நீ போய்⋆
கூடிக் குரவை பிணை⋆ கோமளப் பிள்ளாய்⋆
தேடித் திருமாமகள்⋆ மண்மகள் நிற்ப⋆
ஏடி! இதுவென்⋆ இதுவென் இதுவென்னோ (9)

‡அல்லிக் கமலக் கண்ணனை⋆ அங்கோர் ஆய்ச்சி⋆
எல்லிப் பொழுதூடிய⋆ ஊடல் திறத்தை⋆
கல்லின் மலி தோள்⋆ கலியன் சொன்ன மாலை⋆
சொல்லித் துதிப்பார் அவர்⋆ துக்கம் இலரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ நீள் நாகம் ॥

கண்ணனைக் காணாக் கண் முதலியன பயனில எனல்

‡நீள் நாகம் சுற்றி⋆ நெடு வரை நட்டு⋆ ஆழ் கடலைப்
பேணான் கடைந்து⋆ அமுதம் கொண்டுகந்த பெம்மானை⋆
பூணார மார்வனைப்⋆ புள்ளூரும் பொன் மலையை⋆
காணாதார் கண் என்றும்⋆ கண்ணல்ல கண்டாமே (1)

நீள்வான் குறள் உருவாய்⋆ நின்றிரந்து மாவலி மண்⋆
தாளால் அளவிட்ட⋆ தக்கணைக்கு மிக்கானை⋆
தோளாத மாமணியைத்⋆ தொண்டர்க்கினியானை⋆
கேளாச் செவிகள்⋆ செவியல்ல கேட்டாமே (2)

தூயானைத்⋆ தூய மறையானை⋆ தென்னாலி
மேயானை⋆ மேவாள் உயிருண்டமுதுண்ட
வாயானை⋆ மாலை வணங்கி⋆ அவன் பெருமை
பேசாதார்⋆ பேச்சென்றும்⋆ பேச்சல்ல கேட்டாமே (3)

கூடா இரணியனைக்⋆ கூருகிரால் மார்விடந்த⋆
ஓடா அடல் அரியை⋆ உம்பரார் கோமனை⋆
தோடார் நறுந் துழாய்⋆ மார்வனை ஆர்வத்தால்⋆
பாடாதார் பாட்டென்றும்⋆ பாட்டல்ல கேட்டாமே (4)

மையார் கடலும்⋆ மணி வரையும் மா முகிலும்⋆
கொய்யார் குவளையும்⋆ காயாவும் போன்றிருண்ட
மெய்யானை⋆ மெய்ய மலையானைச்⋆ சங்கேந்தும்
கையானை⋆ கை தொழா⋆ கையல்ல கண்டாமே (5)

கள்ளார் துழாயும்⋆ கணவலரும் கூவிளையும்⋆
முள்ளார் முளரியும்⋆ ஆம்பலும் முன் கண்டக்கால்⋆
புள்ளாய் ஓர் ஏனமாய்ப்⋆ புக்கிடந்தான் பொன்னடிக்கென்று⋆
உள்ளாதார் உள்ளத்தை⋆ உள்ளமாக் கொள்ளோமே (6)

கனையார் கடலும்⋆ கருவிளையும் காயாவும்
அனையானை⋆ அன்பினால்⋆ ஆர்வத்தால்⋆ என்றும்
சுனையார் மலர் இட்டுத்⋆ தொண்டராய் நின்று
நினையாதார்⋆ நெஞ்சென்றும்⋆ நெஞ்சல்ல கண்டாமே (7)

வெறியார் கருங்கூந்தல்⋆ ஆய்ச்சியர் வைத்த⋆
உறியார் நறு வெண்ணெய்⋆ தானுகந்துண்ட
சிறியானை⋆ செங்கணெடியானைச்⋆ சிந்தி-
த்தறியாதார்⋆ என்றும் அறியாதார் கண்டாமே (8)

‡தேனொடு வண்டாலும்⋆ திருமாலிருஞ்சோலை⋆
தான் இடமாக் கொண்டான்⋆ தட மலர்க் கண்ணிக்காய்⋆
ஆன் விடை ஏழ் அன்றடர்த்தாற்கு⋆ ஆள் ஆனார் அல்லாதார்⋆
மானிடவர் அல்லர் என்று⋆ என் மனத்தே வைத்தேனே (9)

‡மெய்ந் நின்ற⋆ பாவம் அகல⋆ திருமாலைக்
கைந் நின்ற ஆழியான்⋆ சூழும் கழல் சூடி⋆
கைந் நின்ற வேற்கைக்⋆ கலியன் ஒலி மாலை⋆
ஐயொன்றும் ஐந்தும்⋆ இவை பாடி ஆடுமினே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

prapatti.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ மாற்றமுள ‖

நம்பியை நோக்கி உய்யும் வகையருள் எனல்

‡மாற்றம் உள⋆ ஆகிலும் சொல்லுவன்⋆ மக்கள்
தோற்றக் குழி⋆ தோற்றுவிப்பாய்கொல் என்றின்னம்⋆
ஆற்றங்கரை வாழ் மரம் போல்⋆ அஞ்சுகின்றேன்⋆
நாற்றச் சுவை⋆ ஊறொலியாகிய நம்பீ! (1)

சீற்றம் உள⋆ ஆகிலும் செப்புவன்⋆ மக்கள்
தோற்றக் குழி⋆ தோற்றுவிப்பாய்கொல் என்றஞ்சி⋆
காற்றத்திடைப்பட்ட⋆ கலவர் மனம் போல⋆
ஆற்றத் துளங்கா நிற்பன்⋆ ஆழி வலவா! (2)

தூங்கார் பிறவிக்கள்⋆ இன்னம் புகப்பெய்து⋆
வாங்காய் என்று சிந்தித்து⋆ நான் அதற்கஞ்சி⋆
பாம்போடொரு கூரையிலே⋆ பயின்றாற்போல்⋆
தாங்காதுள்ளம் தள்ளும்⋆ என் தாமரைக் கண்ணா! (3)

உருவார் பிறவிக்கள்⋆ இன்னம் புகப்பெய்து⋆
திரிவாய் என்று சிந்தித்தி⋆ என்றதற்கஞ்சி⋆
இருபாடெரிகொள்ளியின்⋆ உள் எறும்பே போல்⋆
உருகாநிற்கும் என்னுள்ளம்⋆ ஊழி முதல்வா! (4)

கொள்ளக் குறையாத⋆ இடும்பைக் குழியில்⋆
தள்ளி புகப் பெய்தி கொல்⋆ என்றதற்கஞ்சி⋆
வெள்ளத்திடைப்பட்ட⋆ நரியினம் போலே⋆
உள்ளம் துளங்கா நிற்பன்⋆ ஊழி முதல்வா! (5)

படை நின்ற⋆ பைந் தாமரையோடு⋆ அணி நீலம்
மடை நின்றலரும்⋆ வயலாலி மணாளா⋆
இடையன் எறிந்த மரமே⋆ ஒத்திராமே⋆
அடைய அருளாய்⋆ எனக்குந்தன் அருளே (6)

‡வேம்பின் புழு⋆ வேம்பன்றி உண்ணாது⋆ அடியேன்
    நான் பின்னும்⋆ உன் சேவடியன்றி நயவேன்⋆
தேம்பல் இளந் திங்கள்⋆ சிறைவிடுத்து⋆ ஐவாய்ப்
    பாம்பின் அணைப்⋆ பள்ளி கொண்டாய் பரஞ்சோதீ! (7)

‡அணியார் பொழில் சூழ்⋆ அரங்க நகர் அப்பா⋆
    துணியேன் இனி⋆ நின் அருள் அல்லதெனக்கு⋆
மணியே! மணி மாணிக்கமே!⋆ மதுசூதா⋆
    பணியாய் எனக்குய்யும் வகை⋆ பரஞ்சோதீ! (8)

‡நந்தா நரகத்தழுந்தா வகை⋆ நாளும்
    எந்தாய்! தொண்டர் ஆனவர்க்கு⋆ இன்னருள் செய்வாய்⋆
சந்தோகா! தலைவனே!⋆ தாமரைக் கண்ணா⋆
    அந்தோ! அடியேற்கு⋆ அருளாய் உன்னருளே (9)

‡குன்றம் எடுத்து⋆ ஆனிரை காத்தவன் தன்னை⋆
    மன்றில் புகழ்⋆ மங்கை மன் கலிகன்றி சொல்⋆
ஒன்று நின்ற ஒன்பதும்⋆ வல்லவர் தம்மேல்⋆
    என்றும் வினையாயின⋆ சாரகில்லாவே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

prapatti.com